[29th October 1962

அரிசன மாணவர் விடுதிகள்

*825 கேள்வி.— புலவர் கா. கோவிந்தன் : கனம் விவசாய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1957-ல் வடாற்காடு மாவட்டத்தில் எத்தனை அரிசன மாணவர் விடுதிகள் இருந்தன ?

(இ) அவற்றுள் சேர்ந்திருந்த அரிசன மாணவர்கள் எத்தனை பேர் ?

(உ) சென்ற கல்வியாண்டில் எத்தனை மாணவர்கள் சேர்க்கப்பட்டனர் ?

THE HON. SRI P. KAKKAN : (a) In 1957, there were two Government hostels and 14 subsidised hostels for boys and two Government hostels and three subsidised hostels for Girls in North Arcot district.

(b) In the Government hostels, there were 80 Harijan boys, 80 Harijan girls. In the subsidised hostels there were 700 Harijan boys and 50 Harijan girls.

(c) In 1961, there were 13 Government hostels and three subsidised hostels for boys and five Government hostels and two subsidised hostels for girls. In the Government hostels there were 696 Harijan boys and 194 Harijan girls. In the subsidised hostels there were 192 Harijan boys and 68 Harijan girls.

புலவர் கா. கோவிந்தன் : ஐந்து மைலுக்கு ஒரு உயர்தரப் பள்ளி என்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அதனால் மாணவர்கள் தொகை பெருகி வருகிறது. ஆகவே அரிஜன மாணவ விடுதிகளை அதிகப்படுத்துவதற்கும் பள்ளிகள் இருக்கக்கூடிய இடங்களில் விடுதிகளை அமைக்கவும் தக்க நடவடிக்கையை அரசாங்கம் எடுக்க முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பி. கக்கன் : அவைகளை அதிகப்படுத்த வேண்டுமானால் இட வசதி, நிதி வசதி முதலியவைகளையெல்லாம் பார்க்க வேண்டியதாக இருக்கிறது. இட வசதி, நிதி வசதி இருந்தால் அதிகரித்துக்கொண்டு தான் வருகிறோம்.

*826 கேள்வி.—புலவர் கா. கோவிந்தன் : கனம் விவசாய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1961-ல் அரிசன மாணவர் விடுதியில் சேர்த்துக் கொள்ளுமாறு பிற்பட்ட வகுப்பு மாணவர்களிடமிருந்தும், முற்போக்கு வகுப்பு மாணவர்களிடமிருந்தும் எத்தனை விண்ணப்பங்கள் வந்தன ?

(இ) அவற்றுள் எத்தனை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன ?

THE HON. SRI P. KAKKAN : (அ) Applications from 3,216 Backward Class pupils and 525 Forward Community pupils were received.